Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 18 ஆம் நாள் ஷவ்வால் 18. (31-3-61) வெள்ளிக்கிழமை இதழ் 42

-இராணுவத்தினர், அரசாங்க ஊழியர் விடுமுறைகள் ரத்து-

இன்றுமுக்கியமகாநாடு

அரசாங்க அதிபர்கள் படைத் தளபதிகள் கலந்துகொள்வர்

கொழும்பு, வெள்ளி

இராணுவத்தினரின் விடுமுறைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அரசாங்க அதிபர்கள் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இன்று கொழும்பில் நடைபெறவிருக்கும் முக்கிய மகாநாட்டொன்றில் தமிழ்ப் பகுதி அரசாங்க அதிபர்களுடன் தரைப்படை, கடற்படை அதிகாரிகளும் கலந்து கொள்வார்களென அறியப்படுகிறது.

சகல அரசாங்க ஊழியர்களினதும் விடுமுறைகளை நாளை சனிக்கிழமையிலிருந்து ரத்துச்செய்வ தென்று நேற்று மந்திரிசபை முடிவுசெய்தது. இந்த முடிவைத் தொடர்ந்து அரசாங்க ஊழியரின் விடுமுறைகளை ரத்துச் செய்யும் படி திறைசேரிக்கும் அரசாங்க இலாகாத் தலைவர்களுக்கும் உடனடியாக 'போனில்' அறிவிக்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களின் விடுமுறைகளை ரத்துச்செய்யும் உத்தரவு பற்றி சகல அரசாங்க அதிபர்களுக்கும் உள்நாட்டு அமைச்சினால் அறிவிக்கப்பட்டது. தமிழ்ப் பகுதி நிலைமைபற்றிக் கடைசியாகக் கிடைத்த அறிக்கைகளைப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு நேற்றைய மந்திரிசபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தது. இந்த அறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே இன்று கூடவிருக்கும் முக்கிய மகாநாடு பற்றி முடிவு செய்யப்பட்டது.

நேற்றுப் பிற்பகலிலிருந்தே யாழ்ப்பாணத்தில் அவசரகாலச் சட்டம்பற்றி பெரும் வதந்தி அடிபட ஆரம்பித்துவிட்டது.

வருகிற ஏப்ரல் 4ம் திகதி அரசாங்கப் பாராளுமன்றக்கட்சி கூடுகிறது. சத்தியாக்கிரகம் பற்றி இக் கூட்டத்தில் பூரணமாக ஆராய்ந்த பின், அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைபற்றி ஆராயவேண்டுமென ஒருசாரார் யோசனை கூறியதாயும், இந்த யோசனை ஏற்கப்பட்டால் அதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாதென்றும் தெரிகிறது.

வருகிற 4ம் திகதி வங்கிக் குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தம் பற்றியும் மந்திரிசபை ஆலோசித்தது. இதுபற்றி மீண்டும் விவாதம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

எஸ். ஜே. வி. க்கு வாழ்த்து

திரு. எஸ். ஜே. வி. யின் 63-வது பிறந்தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர சபை அங்கத்தவர் ஹாஜி வி. எம். எம். அபுசாலி ஜே. பி. கீழ்க்கண்ட செய்தியை விடுத்துள்ளார்.

தலைவர் எஸ். ஜே வி.அவர்களின் 63வதுஜனன தினமாகிய இன்று இலங்கை வாழ் தமிழ் பேசும் இஸ்லாமியர் சார்பாகவும் என்சார்பாகவும் எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் திரேக சௌகரியத்தையும் கொடுத்து இன்னும் பல்லாண்டு காலம் தமிழ்ப் பேசும் இனத்தை நேர் வழியில் நடத்திச் செல்ல வேண்டுமெனப் பிரார்த்திக்கி றேம்.

இலங்கைவரும் வெளிநாட்டு பத்திரிகைகள்

தணிக்கை செய்ய மந்திரிசபை தீர்மானம்

கொழும்பு வெள்ளி

பிரதமரைத் தாக்கியும், அரசாங்கக் கொள்கைகளைக் கண்டித்தும் இலங்கைக்கு அனுப்பப்படும் வெளிநாட்டுப் பத்திரிகைகளைத் தணிக்கை செய்வதென நேற்று மந்திரிசபைக் கூட்டம் தீர்மானித்தது. உள்நாட்டுப் புரட்சி, சத்தியாக்கிரகம் ஆகியனபற்றி எழுதப்படும் வெளிநாட்டுப் பத்திரிகைகளும் தணிக்கை செய்யப்படும். இலங்கைவரும் பத்திரிகைகளை ஆராய்ந்து அவற்றை விநியோகிக்கும் பொறுப்பு சுங்க இலாகா அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெளியீடும் பரிசீலனை செய்தபின்னரே விநியோகத்துக்குவரும்.

'அடுத்த நடவடிக்கை பற்றிஅறிவிப்போம்'

அவசரகாலச் சட்ட வதந்திக்கு டாக்டர் நாகநாதன் பதில்

யாழ்ப்பாணம், வெள்ளி

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டால் அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது பற்றித் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அந்தச் சமயத்தில் அதுபற்றி அறிவிக்கப்படுமென்றும் டாக்டர் நாகநாதன்நேற்று மாலை கைலாச பிள்ளையார் கோவில் முன் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் அறிவித்தார்.

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் மைதானத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமை வகித்தார்.

எவ்வளவு கஷ்டம் வந்தாலும் உரிமைக்காக நடைபெறும் இப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகள் எடுத்தபோதிலும் நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டுமென்றும் அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

"அரசாங்கம் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்தால் அடுத்து நாங்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுபற்றித் தீர்மானித்திருக்கிறோம். எந்தச் சமயத்தில் மக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை நாங்கள் அந்த அந்தச் சமயத்தில் அறிவிப்போம்" என்று டாக்டர் நாகநாதன் கூறினார்.

அடுத்து வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், "சிங்கள மக்களுடன் சகோதரர்களாக வாழ விரும்புகின்றோமேயன்றி எமது நாட்டில் அடிமைகளாகவோ பிரிந்து தனியாகவோ வாழ விரும்பவில்லை" என்றார்.

மேயர் டி. எஸ். துரைராஜா பேசுகையில் சகல தமிழ்பேசும் மக்களும்ஒற்றுமையுடனும்உறுதியுடனும் இப்போராட்டத்தை நடாத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். "அரசாங்க அதிபரின் இல்லம் இன்று காடையரின் வசிப்பிடமாக மாறிவிட்டதென்பதைப் பிரதமருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று மேயர் கூறினர். சாந்தியவழியில் நடைபெறும் இந்த அகிம்சைப் போராட்டம் வெற்றி பெற்றே தீரும் என்று மேயர் நம்பிக்கை தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

பங்கீட்டரிசி விநியோகம்

'பிரச்சினையைத்தீர்க்க கேணல் உடுகமவிடம் யோசனை கூறினேம்'

மேற்றிராணியார் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பங்கீட்டரிசி விநியோகம் சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவப் படையின் தளபதி கேணல் உடுகமையுடன் யாழ்ப்பாண மேற்றிராணியாரும் சங். டாக்டர் நைல்ஸும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பங்கீட்டரிசிப்பிரச்சினையில் மேற்றிராணியாரும் சங். டாக்டர் நைல்சும் தலையிடுவார்களென்று இரு அமைச்சுகள் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மேற்றிராணியார் டாக்டர் எமிலியானுஸ்பிள்ளை நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

உணவுப்பொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு ஒரு வழிகாணும் நோக்கமாக சங். டாக்டர் நைல்ஸும், நானும் அரசாங்க அதிபரைச் சந்திப்பதற்கு முயற்சிசெய்தோம். அவர் இரண்டு நாட்களுக்கு யாழ்ப்பாணத்திலிருக்க மாட்டாரென்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. கேணல் உடுகமையைச் சந்திக்க நாங்கள் முடிவு செய்தோம்.

அரிசி விநியோக நிலையத்திலிருந்து பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவிரும்பும் கூட்டுறவுச் சமாஜங்கள் தெரிவித்த யோசனையைப் பின்பற்றுவதிலுள்ள நன்மையை கேணல் உடுகமைக்கு உணர்த்த எங்கள் சம்பாஷணையின்போது

(5ம் பக்கம் பார்க்க)

தளபதி கதிர்காமருக்கு ரூபாய் 3,999 அபராதம்

தீர்ப்பை எதிர்த்து மனுச்செய்வார்

கொழும்பு, வியாழன்

நாலாயிரம் ரூபாய் பெறுமதியான புகைப்படம் பிடிக்கும் 'கமரா' ஒன்றை நாட்டுக்குள் கடத்திக் கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் மீது கடற்படையின் பதில் தளபதி கொமடோர்ராஜன் கதிர்காமருக்கு சுங்கப்பகுதியினர் 3999 ரூபாய் அபதாரம் விதித்துள்ளனர்.

தளபதி கதிர்காமருக்காக கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் அந்தக் கமராவைக் கடத்திக்கொண்டு வந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பையும் அபராதம் விதிக்கப்பட்டதையும் ஏற்க மறுத்து தளபதிராஜன் கதிர்காமர் சுங்கஇலாகாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். இது சம்பந்தமாக அவர் மனுச்செய்ய உத்தேசித்துள்ளார்.

இந்தக் கமராவிஷயம் பற்றி பார்லிமெண்டில் கம்பகா எம். பி. பிரச்சினை கிளப்பியதும் அதைத் தொடர்ந்து துப்பறியும் பொலிசார் விசாரணை நடத்தியதும் வாசகநேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

மணிவாக்கு

உண்மையும் அன்பும் இவ்வுலகில் மிக்க வலிமையுள்ள பொருள்களில் இரண்டாகும். இவ்விரண்டும் ஒருங்கே கூடிச் செல்லும்போது, அவற்றை எளிதாக எதிர்த்தல் இயலாது.

—கட்வொர்த்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 18 உ (31-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

இடைத் தேர்தல் முடிவுகள்

மாத்தளை, ரத்கமை, குருநாகல் இம்மூன்று தொகுதிகளிலும் நடந்த இடைத்தேர்தல் முடிவுகள் ஒரு முக்கிய விஷயத்தை நன்கு அறிவுறுத்தியுள்ளன. அதாவது வகுப்புவாதத்தையும் வகுப்புவாதிகளையும் சிங்களப் பொதுமக்களும் ஆதரிக்கவில்லை என்பதுதான்.

இலங்கையில் இன்று பகிரங்கமாக, வகுப்புவிஷத்தைக் கக்கும் கட்சிகள் பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி. யும் கே. எம். பி. ராஜரத்தினவின் ஜே. வி. பியும்தான். எம். ஈ. பி. ரத்கமையிலும், ஜே. வி. பி. குருநாகல் தொகுதியிலும் போட்டியிட்டன. தமிழர்மீதும், இந்திய வம்சாவளியினர்மீதும் வழக்கம்போல் துவேஷப்பிரசாரங்கள் செய்தனர். இதனால் கிடைத்த பலன் என்ன? ரத்கமையில் மொத்தம் வாக்களித்த 27158 பேர்களில் எம். ஈ. பி.யை ஆதரித்தவர் 512 பேர்கள்தான்: குருநாகலில் மொத்தம் 21431 வாக்குகள் பதிவானதில் கே. எம். பி. ராஜரத்னவின் கட்சிக்கு 386 வாக்குகளே கிடைத்திருக்கின்றன.

சிங்கள மக்கள் வகுப்புவாதத்தையும் துவேஷத்தையும் ஆதரிக்கவில்லை என்பதற்கு வேறு அத்தாட்சிதேவையில்லை. அரசியல் வாதிகள் யாரும் இனி வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பிவிட்டு சிங்கள மக்களின் ஆதரவைப் பெறலாமென்று நினைத்தால் அது பெரும் ஏமாற்றத்தில் தான் முடியும். சென்ற வருடத்தில் நடந்த இருபொதுத் தேர்தல்களிலும் இது நன்கு நிரூபணமாயிற்று. என்றாலும் மேற்குறித்த இரு வகுப்புவாதக் கட்சிகளும் இதை உணராமல், மீண்டும் பழைய துவேஷக் கொள்கைகளையே நம்பி, இடைத்தேர்தலிலும் போட்டியிட்டன. இரு தொகுதிகளிலும் இரு கட்சிக்கும் கிடைத்த பெருந் தோல்வியால் அவர்களுக்கு மனமாற்றம் ஏற்படுமென்று நாம் நம்பவில்லை. என்றாலும் சிங்களப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்குமென்று இனி எந்த அரசியல் வாதியும் வகுப்பு வாத அரசியலை நம்பி இருக்க முடியாது.

மூன்று தொகுதி தேர்தல் முடிவுகளிலும் பழைய நிலைமையில் எவ்வித மாற்றமுமில்லை! ஒரு சிறிய மாறுதல் என்னவெனில், மாத்தளையில், யூ. என். பி. அபேட்சகருக்கு அதிக 'மெஜாரிட்டி' கிடைத்திருக்கையில், ரத்கமை, குருநாகல் இவ்விரு தொகுதிகளிலும் வென்ற சுதந்திரக்கட்சி அபேட்சகர்களுக்கு "மெஜாரிட்டி" குறைவுதான். தமிழருக்குச் சாதகமாக ஐக்கிய தேசியக் கட்சி மாறியுள்ளதாக சுதந்திரக்கட்சியினர் தேர்தல் பிரசாரம் செய்ததின் பயன்தான் இதுவோ என்னவோ!

இம் மூன்று இடைத் தேர்தல்களும் முடிந்துவிட்டதாலும், வகுப்புவாதத்தை சிங்களப் பொதுமக்கள் சற்றும் ஆதரிக்காததாலும், அரசாங்கம் இனி, தமிழ் மொழிப் பிரச்னையையும், இந்திய வம்சாவளிப் பிரச்னையையும் ஜனநாயக தர்மப்படி மனிதாபிமானத்துடன், விரிந்த மனப்பான்மையுடன், துணிச்சலுடன் தீர்க்கமுன் வரவேண்டும். நாட்டிலே மீண்டும் வகுப்பு ஒற்றுமையும், ஒத்துழைப்பும் வேண்டுமென்றே சிங்களப் பொதுமக்களும் விரும்புவது இத் தேர்தல்கள் மூலம் வெளியாகிவிட்டதால், இனி அதற்கான முறையில் அரசாங்கம் தவக்கமின்றி காரியம் செய்ய முன்வரவேண்டும்.

இன்று தலைவா எஸ்.ஜே. வி.யின் பிறந்ததினம்

'தமிழ் பேசும் மக்களுக்கு வெற்றி ஈட்டித்தருவார்!'

இன்று தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பிறந்த தினம்.

தமிழ்ப் பேசும் இனங்களது தேசியப் போராட்டம் வெற்றி நிச்சயம் எனக் கூறிய தலைவர் எஸ். ஜே வி.யின் சாதகத்தை ஒரு "சோதிடர்" கணித்து அனுப்பியுள்ளார். அதனை இங்கு வெளியிடுகிறோம்.

தமிழ்ப் பேசும் இனங்கள் தங்கள் மொழியுரிமை—பிரதேச உரிமை—சுய நிர்ணய உரிமை பெற்று வாழ்வதே தமது வாழ்வு என எண்ணி, சொல்வி—செயல் புரிந்து வாழும் தமிழ்த் தலைவரின் ஜனன சாதகப்படி, தமிழ் பேசும் இனமக்கள் தம் உரிமைகளை நிச்சயமாக அடைந்தே அதுவும் மிகவிரைவில் பெற்றே தீருவார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த முதுதமிழ்க்குடும்பத்தோன்றியவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மலையாவில் ஈப்போ என்னும் பட்டணத்தில் 1898 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1-ம் தேதி வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் நேரப்படி நான்கு மணியளவில் (தமிழ் ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 19ந் தேதி வியாழக் கிழமை பின்னிரவு 4 மணி வளவில்) பிறந்தார்.

சாதகரீதியாக அன்று சூரியோதயாதி சென்ற நேரம் 54 நாழிகை 30 வினாடியாகும். இதற்குக் கணித்துக் கண்ட இலக்கினம் கும்பம். நவாம்ச இலக்கினம் மகரம். அன்றைய நட்சத்திரம் பூசம் 2-ம் பாதமாகும்.

சூரி. வெள்.	புதன்	4	கேது
இரா. செவ்.	நவக்கிரகநிலை		சந்.
12			7
இரா.	சனி	9	வியா

வெள் செவ்.	4	புதன் வியா.	கேது
2	நவாம்சநிலை		7
இல.			8
இரா. சூரி.	சனி	10	சந்.

ஜெனன காலத்தில் சனிமகா தசையில் சென்றது போக நின்ற வருடம் 12, மாதம் 8, தினம் 27. இன்று அவருக்கு சந்திர மகா தசையில் சந்திர புத்தி 1961 ஜனவரி 28ன்மேல் ஆரம்பித்துள்ளது. 1961 நவம்பர் 28ன் மேல் சந்திர தசையில் செவ்வாய் புத்தி நடைபெறும். சாதகப் பலனின்படி வரும் ஏப்பிரல் மாதம் நடுப் பகுதியின்மேல் இவரது பலன்கள் விசேடமாகக் காணப்படுகின்றன. அதுவரையும் இவரால் ஆரம்பிக்கப்பட்ட இன்றைய சாத்வீகப் போராட்டம் தீர்க்கப்பட ஒருவித வழியும் தோற்றப்படமாட்டாது. பல்வேறு நெருக்கடிகளும் ஆதிக்கப் பயமுறுத்தல்களும் அக்கிரமச் செயல்களும் இந்த இடைக்காலத்தில் ஏற்பட இடமுண்டாகின்றது. தமிழுக்குப் பிறகு வருடம் பிறக்கும் காலம் முதல் (சித்திரை மாதம்) நற்பயன்கள் தென்பட்டத் தொடங்கும். 1962ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ந் தேதி தொடக்கம் பெப்ரவரி 6ந்தேதி மாலை வரையும் உள்ள காலம் ஒரு சோதனைக் கட்டமாகும். இக்கால ஆரம்பத்துக்கு முன்னதாக பெருமளவில் தமிழ்ப் பேசும் இனங்களுக்கு இப் பெரியார் வெற்றியை ஈட்டித் தருவார் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பிட்ட பதினைந்து தினங்களில் இந்நாட்டில் ஏற்படும் இயற்கையின் ஊறுபாடுகள் காரணமாக எஞ்சிநிற்கும் உரிமைகளையும் தமிழ்ப் பேசும் இனம் தொடர்ந்து பெற்றுவிடும் என்பதற்கு தலைவரது சாதகம் சான்று பகருகின்றது.

மணற்காட்டில் மது ஒழிப்பு வெற்றி

உடுப்பிட்டி வியாழன்

வடமராட்சியைச் சேர்ந்த மணற்காடு என்னும் கிராமத்தில் ஒரு சில ஊர்ப்பிரமுகரின் முயற்சியால் கள்ளு இறக்குவது நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இன்று கிராம வாசிகளிடையே பரஸ்பர ஒற்றுமையும், அமைதியும் நிலவுகிறது. இவ்வியக்கத்தில் இளைஞர் முக்கிய பங்கெடுத்துக்கொண்டனர்.

உயிரைக் காப்பாற்றுதால்

டாக்டருக்கு அடி

புதுடில்லி, மார்ச் 29

ஒரு குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை என்பதற்காக, இறந்த குழந்தையின் உறவினரால் தாக்கப்பட்ட ஒருடாக்டர் கேற்றுடில்லி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிப்பட்டார்.

குறித்த டாக்டர் 18 மாத பெண் குழந்தை ஒன்றுக்கு வீட்டில் சிகிச்சை அளித்து வந்தாரென்றும் அவர் பக்கத்தில்இருக்கும்போதே குழந்தை இறந்து விட்டதாகவும் தெரிகிறது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தையின் உறவினர், ஒரு இரும்புக் கம்பியை எடுத்து டாக்டரை அடித்ததினால் டாக்டர் மயக்கமுற்று விழுந்தார் என அறியப்படுகிறது.

ஐயாறன் எழுதுவது

இன்று மிகவும் புனிதமான ஒரு நாள். பௌர்ணமி, பங்குனி உத்தரம், நடராஜ அபிஷேகம், பெரிய வெள்ளிக் கிழமை.

அன்பே உருவான இயேசு நாதர், சிலுவையில் அறையப்பட்டு உயிர்த் தியாகம் செய்த நாள் இன்று.

தன்னை இம்சித்தவர்களையும் மன்னிக்கும் படி ஆண்டவனை அந்த அண்ணல் வேண்டிய தினம் இது.

கிறிஸ்து பெருமானும் அவரது அரிய போதனைகளும் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல; உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் பொது உடைமையாகும். தமது வாழ்க்கை மூலமும், போதனைகள் வாயிலாகவும் இயேசுநாதர், அன்பு நெறியை உபதேசித்துள்ளார். குஷ்ட ரோகிகளின் கால்களையும் தழுவி மன்னுயிர்களை வெறுக்காமல் யாருக்கும் பணி செய்ய வேண்டியதை அறிவுறுத்தியுள்ளார். உலகம் உள்ளளவும், அவரது உபதேசங்கள் மக்களுக்கு நல் வழி காட்டிவரும்.

⁂

பங்குனி உத்தரம் பார்வதிக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நடந்த தினம். மலைமகள், தவம் கிடந்தாள், இமய மலைச்சாரலிலே. எதற்கு? தமக்கு நல்ல கணவன் வரவேண்டுமென்று. அவரது மனம் போல் சிவபெருமானே மணவாளனாக வாய்த்து விட்டார்.

இக்காலத்திலே, பொதுவாக கல்யாணமென்பது ஒரு 'பிஸ்னஸ்' போல் ஆகிவிட்டது (சிலரைத் தவிர). சீதனம் எவ்வளவு? அதைப்பொறுத்தே அந்த 'ரேடுக்கு'த் தக்கபடி மனமாகின மார்க்கெட்டில் பிடிக்க முயலுகிறோம்.

சீதனம் கொடுப்பதிலோ, வாங்குவதிலோ தவறு எதுவுமில்லை. புதிய தம்பதிகளுக்கு புதுக் குடும்பம் நடத்த இது பெரிதும் உதவுகிறது. ஆனால் பெண் வீட்டார் இஷ்டப்பட்டு எதுவும் கொடுப்பதாயின் நல்லது. ஆனால் மார்க்கெட்டில் கத்திரிக்காய் பேரம் செய்வது போல், மாப்பிள்ளை பேசுவதாயின் அது தான் திருமணத்தின் புனித நோக்கத்தையே மாற்றி பல கேடுகளுக்கும் காரணமாகி விடுகிறது.

⁂

பார்வதியின் திருமணத்தைப் பற்றி தன் பெற்றோர்களுக்குக் கவலை எதுவும் வைக்கவில்லை. தானே தவமிருந்தார்; கிடைத்தற்கரிய நாயகனைப் பெற்றார்.

இக்காலப் பெண்களும் பார்வதியைப் போல், நல்ல நாயகனுக்காகத் தவமிருக்க வேண்டுமென்றும் சீதனம் வேண்டுமென்று நிபந்தனை கேட்பவரை சுயமரியாதையை முன்னிட்டு மணக்க மறுத்துவிட வேண்டுமென்றும் மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வந்திருந்த போது தமிழ்ப் பெண்களுக்கு உபதேசம் செய்தார்.

பார்வதி காட்டிய வழியில் நம் பெண்களும் நடப்பதாயின், பெண்களைப் பெற்றவர்களின் கவலை பெரிதும் நீருமல்லவா?

⁂

முருகன் திருஅவதாரத்துக்கு இந்த விவாகம் காரணமாக இருப்பதால், இன்று முருகன் கோவில்களிலெல்லாம் பெரிய விசேஷம். காவடிகளெல்லாம் எடுப்பார்கள். பிரதமர் சிறிமாகூட முருகனுக்குக் காவடிஎடுத்துள்ளார். முருகன் இந்நாட்டிலுள்ள இரு முக்கிய சமூகத்தவர்க்கும் பொதுவானவர். இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பொதுத் தெய்வம். இன்று அரசியல் காரணமாக இரு சமூகங்களும் பிரிந்துள்ளன. பிணக்குகளைத் தீர்த்து, இரு சமூகங்களுக்கும் கட்புறவு ஏற்படுத்த வேண்டுமென்று அவனது அடியார்கள் சேர்ந்து வேண்டினால், அவன் அவ்வாறே அருள் செய்யமாட்டானா?

⁂

கோவில் உற்சவத்துக்குச் சென்ற வருஷத்தைவிட இவ்வாண்டில் கூட்டம் அதிகம். போனவருஷம் சுவாமி தூக்கவும் ஆளில்லாமலிருந்தது. இவ்வாண்டில் போட்டிபோட்டுக்கொண்டு பலரும் முன்வந்ததைக் கண்டேன்.

கோவில் உற்சவத்தில் பலர் கண்ணீர்விட்டதைக்கண்டேன். இங்கு மக்களிடையே உள்ள பக்தி, தமிழ் நாட்டில் தாம் கண்டதைவிட மிக அதிகம் என்று அங்கிருந்து வந்துள்ள ஓர் அன்பர் பாராட்டினார். உண்மைப்பக்தி மட்டும் இருந்தால், நமக்கு இறையருளால் எல்லாம் கிடைக்குமென்கிறார் மகாகவி பாரதியார். அவர் வாக்குப் பொய்யாகுமா?

இதற்கெல்லாம் சத்தியாக்கிரகம்தான் காரணமென்றும் அடிவிழுந்ததால் பலரும் ஆண்டவனே கதியென்று வருவதாயும், கண்ணீர்விட்டுக்கதறி மனம் கசிந்தால்தான் ஆண்டவனின் அருள் கிடைக்குமென்றும், ஓர் அன்பர்கூறி தமிழர் ஆண்டவனை நினைத்து இன்னும் அழவேண்டுமென்றும் கூறுகின்றார்.

"பண்டிதர் விஷயத்தில் பராமுகமா?"

உடுப்பிட்டி, வியாழன்

"தமிழ்ப் பண்டிதர் விஷயமாகச் சம்பளக் கமிஷனின் அறிக்கை திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தநிலைமைதான் தொடர்ந்து இனிமேலும் இருக்கவேண்டுமா? சுயபாஷைகளுக்கு வேண்டிய ஆதரவு அளிப்பதாகக்கூறும் அரசாங்கம் தமிழ்ப்பண்டிதர்கள் விஷயத்தில் பராமுகமாக இருப்பது வருந்தத்தக்கது மட்டுமன்றி, கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்". இவ்வாறு தமிழ்ப் பண்டித பட்டதாரிகள் சங்கச் செயலாளர் திரு. கே. வீரகத்தி, உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரத்துக்கு அனுப்பியுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். கூடியவிரைவில் திரு. சிவசிதம்பரத்தின் தலைமையில் பண்டிதர் தாது கோஷ்டி ஒன்று கல்வி அமைச்சரைக்காணுமெனத்தெரிகிறது.

"பங்கீட்டரிசியை உடனே வழங்குக"

அரசாங்கத்துக்கு அவசரத் தந்தி

உடுப்பிட்டி, வியாழன்

"பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அரிசியை வழங்காமல், பல விதகொண்டிக் காரணங்களைக் கூறிக் கொண்டே போவது, அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுகிறது. முக்கியமாக நிலங்களற்றிருக்கும் 40 வீத கிராமப்புறத் தமிழரின் நிலைமை பரிதாபத்துக்குரியதாயிருக்கிறதென்பதை ஆட்சி பீடம்உணர வேண்டும். அரிசியை மறுப்பதால் அறப்போராட்டம் பிசகுபிசகுத்துப் போமென்று அரசாங்கம் மனப்பால்குடிப்பது, இந்நாட்டின் சரித்திரத்தையே வேறு திசையில் திருப்ப ஒரு காரணமாக அமையக் கூடும்." இவ்வாறு கரவெட்டி வாணி கலைக்கழகமத்திய குழு உறுப்பினர் அரசாங்கத்துக்கு அனுப்பிய ஒரு தந்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

திருச்சியில் புதிய ஒலிபரப்பு நிலையம்

திருச்சினாப்பள்ளி, மார்ச் 30

வருகிற ஏப்ரல் 3-ம் திகதி திருச்சியில் சக்திவாய்ந்த புதிய ஒலிபரப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

பரீத்த பயிற்சி நிலையம்

கொழும்பு, வியாழன்

ஊருகொடவத்தையில் மத்திய தொழில்முறை, வர்த்தக கைத்தொழில் பயிற்சிநிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

'சாத்வீக சத்தியாக்கிரகம்தான் தமிழரின் ஆயுதம்'

சிங்கள பத்திரிகைக்கு எஸ். ஜே. வி. பேட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழரின் மொழி, கலாசாரம் ஆகியவற்றின் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்கு, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென சமஷ்டி ஆட்சிமுறை யொன்றை ஏற்படுத்துவதுதான் ஒரே வழி. தமிழ்ப் பேசும் மக்களின் நம்பிக்கையும் அதுதான்."

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயம் 'தினமின' பத்திரிகை நிருபருக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். திரு. செல்வநாயகம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

காலஞ் சென்ற பிரதமர் கொண்டுவந்த 'சிங்களம் மட்டும்' சட்டம் தமிழர் உரிமைகளுக்கு சாவுமணி அடிப்பதாய் அமைந்தது. அந்தச் சட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் மூர்த்தண்யமாக எதிர்த்தார்கள். தமிழ் மக்களின் எதிர்ப்பு பலமாகவிருந்ததால் திரு. பண்டாரநாயக்கா வுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டிய நிலைமை உருவாகியது. அப்படி பேச்சுவார்த்தைகள் நடத்தியதின் விளைவாக ஒரு உடன்பாடு ஏற்பட்டது.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிராந்திய சபைகள் ஏற்படுத்துவது.

2: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக உபயோகிப்பது.

3. வடக்கு, கிழக்கில் கடிதத் தொடர்புகளைத் தமிழில் வைத்துக்கொள்வது.

இதுதான் அந்த உடன்பாடு. ஆனால் காலஞ் சென்ற பிரதமரின் இல்லத்துக்கு வெளியில் பிக்குகள் உண்ணாவிரதமிருந்து அவரை நெருக்கியதின் காரணமாக இதை அமுல் நடத்த முடியாமல் போய்விட்டது. மேற்குறித்த ஷரத்துகள் அடங்கிய மசோதாவும் பிறகு கிழிக்கப்பட்டது. 1960-ல் யு. என். பி அரசாங்கத்தை வீழ்த்த விரும்பிய சுதந்திரக் கட்சியிடம், காலஞ்சென்ற பிரதமருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தழுவிய கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. காலஞ் சென்ற பிரதமரின் கொள்கையைத் தழுவி, தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாகச் சுதந்திரக் கட்சி அளித்த வாக்குறுதியின் பேரில் யு. என். பி. யை வீழ்த்துவதில் சமஷ்டிக்கட்சி சுதந்திரக் கட்சியுடன் ஒத்துழைத்தது. சுதந்திரக் கட்சியளித்த வாக்குறுதிகள் சம்பந்தமாக, 1960-ல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலின்பின் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரையும், மந்திரிகளையும் சந்தித்து ஏமாற்றமடைந்தனர். தமிழர்களின் கோரிக்கைகள்பற்றி புனராலோசனை செய்யும்படி தமிழரசுக் கட்சி மீண்டும் மீண்டும் பிரதமரைக் கேட்டது. ஆனால் பலன் கிடைக்கவில்லை. அதே சமயம் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்தும் கொள்கையை திருமதி பண்டாரநாயக்கா ஸ்திரப்படுத்தினர். இந்த நிலைமை, நீதிமன்ற மொழி மசோதா அமுலுக்கு வந்ததும் மோசமடைந்தது. ஒரு குடியேற்ற நாட்டு அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் வாழ்வதாகவே தமிழர்கள் இப்பொழுது நினைக்கிறார்கள். இப்படிதிரி சந்தர்ப்பத்தில் 'சத்தியாக்கிரகம்' போன்ற சாத்வீக, நேரடி இயக்கம்தான் தமிழரின் ஒரே ஆயுதமாக இருக்க முடியும்.

புதுடில்லியில் அமெரிக்க மந்திரி

நேருவை சந்தித்தார்

புதுடில்லி, மார்ச். 30

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டீன் ரஸ்க் பிரதமர் நேருவுடன் ஆலோசனை நடத்துவதற்காக இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார். அவரை விமான நிலையத்தில் கல்வி, கலாசார அமைச்சர் உமாயூன் கபீர் உட்பட பலர் வரவேற்றனர்.

டீன் ரஸ்க் விமான நிலையத்திலிருந்து நேராக பார்லிமெண்ட் மாளிகைக்குப் போய் பிரதமர் நேருவைச் சந்தித்தார். 'பிரதமர் நேருவுடன் பேசுவதற்கு நிறைய விஷயங்களிருக்கின்றன' என்று அவர் நிருபர்களிடம் கூறினர். டீன் ரஸ்க், இன்று பிற்பகல் நேருவுடன் உணவு அருந்தியபின் அமெரிக்கா புறப்படுவார்.

"அன்பு வளர்ந்தாலே அமைதி நிலவும்"

வெங்கடேசானந்தஜி பேச்சு

நாவலப்பிட்டி, மார்ச் 30

"மக்கள்சமுதாயத்திலிருந்து அன்பு மறைந்து விட்டது. நாம் மீண்டும் இந்த உலகில் அன்பை வளர்ப்பதன் மூலம்தான் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தலாம். கடவுள் ஒவ்வொரு ஜீவராசிகளிடத்திலும் அன்பு கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கை நம்மிடத்தில் இருக்க வேண்டும்" இவ்வாறு நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கக் கூட்டமொன்றில் ஸ்ரீ வெங்கடேசானந்தஜி பேசினர்.

யோகிராஜ் ஸ்ரீ சச்சிதானந்தாவும் இக் கூட்டத்தில் பேசினர். திரு. பொ. சின்னத்துரை தலைமை வகித்தார். திரு. எஸ். பரமசாமி நன்றி கூறினர்.

பிரான்ஸ் மறுப்பு

பாரிஸ், மார்ச் 30

காங்கோவுக்கு ஐ. நா. செலவினங்களுக்கான தனது பங்கை செலுத்த பிரான்ஸ் மறுத்திருக்கிறது. ரஷ்யா ஏற்கனவே தனது பங்கை செலுத்த மறுத்திருப்பது குறிப்பிடத் தக்கது.

தென்ஆபிரிக்க தேசத்துரோக வழக்கு

எதிரிகள் 28 பேரும் விடுதலை

ஜோகன்னஸ்பார்க், மார். 30

தென்னபிரிக்காவில் தேசத்துரோகம் புரிந்ததாக 28 பேர் மேல் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரிகள் யாவரும் குற்றவாளிகள் அல்லவென்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

தேசத்துரோகம் புரிந்ததாக 156 பேர்மீது தென்னபிரிக்கா அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது. அவர்களில் 28 பேர் மீதுதான் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கைவிசாரணை செய்த நீதிமன்றம் எதிரிகள் குற்றவாளிகள் அல்லவென்று தீர்ப்பளித்தது. தேசியக் காங்கிரஸ் கட்சியில் கம்யூனிஸ்ட் ஊடுறுவல் இல்லையென்று நீதிபதிகள் கூறினர்கள். தீர்ப்பு வெளியானதும் வெளியில் கூடியிருந்த சனங்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்.

தென்ஆபிரிக்க அரசாங்கம், எதிர்ப்புத் தெரிவிப்பவர்களைக் கம்யூனிஸ்டுகள் என்று கூறி குற்றஞ்சாட்டுவதற்கு சரியான அடி கிடைத்திருக்கிறது என்று பிரிட்டோரியாவில் அவதானிகள் கூறினர்.

'அரசாங்கம் போடும் தப்புக் கணக்கு'

இராசதுரை எம். பி. பேச்சு

வாழைச்சேனை, மார்ச் 24

"இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் போராட்டம் தமிழரசுக் கட்சியின் போராட்டம் என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்களை கைது செய்துவிட்டால் போராட்டம் நின்றுவிடும் என்றும் அரசாங்கம் தப்புக்கணக்குப் போட்டுள்ளது. ஆட்சியாளர் இப் போராட்டத்தை நிறுத்துவதற்கு இலங்கையில் வாழும் முப்பது லட்சம் தமிழ் பேசும் மக்களை கைது செய்யவேண்டியிருக்கும். ஏனெனில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் தமிழரசுக் கட்சியின் போராட்டமல்ல; இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் போராட்டம் என்பதை தெளிவு படுத்த விரும்புகிறேன்" என்று, இவ்வாறு மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரை ஏறுவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ஆட்சியாளர் நம்மிடம் பிளவுகளையும் குரோதங்களையும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள் என்பது யாழ்ப்பாண பங்கீட்டரிசி விஷயமாக அவர்கள் கையாண்டு வரும் கொள்கைகளிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. ஆகவே, தமிழ் பேசும் இனம் ஆட்சியாளரின் வலைக்குள் சிக்காமல் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்".

இந்தியாவுக்கு ஹங்கேரி உதவி

புதுடில்லி மார் 30

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஹங்கேரி அரசாங்கம் 8 கோடி ரூபாய் கடன் கொடுக்க இணங்கியுள்ளது.

'சியாட்டோ' தீர்மானத்தில் மிரட்டல் தொனிக்கிறது'

இளவரசர் சுவர்ணபூமா கருத்து

பாங்கொக், மார்ச் 30

பாங்கொக்கில் நடைபெற்று வந்த தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகளின் மந்திரிகள் மகாநாடு நேற்று முடிவடைந்தது.

லாவோஸில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி சம்பந்தமாக மகாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டபின் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. லாவோஸில் சமாதான முயற்சிகள் தோல்வி கண்டால் அதை நிவர்த்திக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

லாவோஸ் நிலைமைபற்றி பிரிட்டன் தெரிவித்திருந்த முன்று அம்ச திட்ட யோசனைக்கான ரஷ்யாவின் பதில் சியாட்டோ மகாநாடு முடிவடையும் வரை வெளியாகவில்லை.

மிரட்டல்

'சியாட்டோ' மகாநாட்டில் லாவோஸ் சம்பந்தமாகச் செய்யப்பட்டுள்ள தீர்மானம்பற்றி லாவோஸ் தலைவர் இளவரசர் சுவர்ணப்பூமா நேற்று ப்ராஸில் கருத்து வெளியிட்டார். லாவோஸில் சமாதானம் நிலவச் செய்வதற்காக நிறைவேற்றப்பட்டுள்ள அத் தீர்மானத்தில் மிரட்டலின் சாயலும் தொனிக்கிறது என்று இளவரசர் சுவர்ணப்பூமா கூறினர்.

லாவோஸ் பிரச்சினை சமாதானமாகத் தீர்க்கப்படவேண்டும், இல்லையென்றால், சியாட்டோ நாடுகள் உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தயங்கக் கூடாதென்று 'சியாட்டோ' மந்திரிகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தமக்கு திருப்தியளிப்பதாகவிருக்கிறது என்று அமெரிக்க வெளி நாட்டு மந்திரி டீன் ரஸ்க் தெரிவித்திருக்கிறார். அவர் 'சியாட்டோ' மகாநாட்டில் கலந்து கொண்டபின் டில்லி வழியாக அமெரிக்கா செல்கிறார். புதுடில்லியில் பாரதப் பிரதமர் நேருவையும் அவர் சந்திப்பார் என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் மந்திரி கருத்து

அந்திய தலையிடு இல்லாமல் லாவோஸ் மக்கள் தம் நிலையை நிர்ணயித்துக்கொள்ள வேண்டுமென்றும், லாவோஸில் சமாதானம் ஏற்பட்டு, நடுநிலைமை நாடாக விளங்கினால் ரஷ்யாவுக்கும் அது நல்லதுதான், என்றும் பிரிட்டிஷ் மந்திரி லார்டுஹியும் நேற்று கூறினர்.

பிராட்சுக்கு ஆயுள் தண்டனை

சிட்னி, மார்ச் 30

அவுஸ்திரேலியாவில் தோர்னே என்ற பையனைக் கொலை செய்ததாக கொழும்பில் கைது செய்யப்பட்ட பிராட்ஸ என்பவருக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்திருக்கிறது.

பதுளை சைவபரிபாலன சங்க தீர்மானம்

பதுளை, மார்ச் 29

பதுளை சைவபரிபாலன சங்கத்தின் 35வது வருடாந்த மகாசபை பொதுக் கூட்டம் உப தலைவர் திரு. ந. சிவசுப் பிரமணியம் தலைமையில் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் கூடி பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறை வேறியது.

இன்று இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி பேசும் மக்கள் நடத்தும் சாத்வீக சத்தியாக்கிரகப்போராட்டம் பூரண வெற்றியடைய வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.

சாத்வீக சத்தியாக்கிரகிகள் மீது பொலிசாரும் இராணுவத்தினரும் குண்டாந்தடிகளையும் துப்பாக்கி முனைகளையும் உபயோகித்து அநீதியான முறையில் தாக்கியதை இச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

15-4-61இல் வெளிவருகிறது!

வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பக வெளியீடு

இக்கால வாணிப முறை

ஆக்கியோன்:

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள், F. C. I.

(ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.)

இது பொதுத் தராதரப் பத்திர (G. C. E.) வகுப்புப் பாடத்திட்டத்திற்கமைவான வர்த்தக கணித நூல்.

இந்நூலில்

வாணிபத்துக்கும் பொருளாதாரத்துக்கு முள்ள தொடர்பு, வியாபாரத்தோடு தொடர்புடைய ஆவணங்கள், போக்கு வரவுச் சாதனங்களின் அமைவு, வங்கி காசோலை உண்டியல் என்பன பற்றிய விளக்கம், நட்டஈடு, பங்கு வியாபாரம், பண்டசாலை அமைப்பு, அதன் விதிகள், இக்கால மேலைட்டு வியாபார முறை என்பன விளக்கப்பட்டுள்ளன.

இந்நூல் மாணவருக்கு மாத்திரமன்றி வியாபார நிலையங்களோடு தொடர்புடைய தொழிலாளர்க்கும் அவற்றை நடாத்தும் வியாபாரிகளுக்கும் பெரிதும் உதவிபுரியக் கூடிய நூல். வாழ்க்கையோடு சம்பந்தமுடைய பல போதிய பயிற்சிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

விற்பனை உரிமையாளர்:

தனலக்குமி புத்தகசாலை

சுன்னாகம்.

வரி விளம்பரம்

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல நோய்களுக்கும் கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 58 யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள E N 630, A 50 கார் பற்றியும் 5 டயரும் புதியன. 40 ஆயிரம் மைல்கள் ஓடியுள்ளது. விபரங்கட்கு: ஆ. நடராசா, தாவடி தெற்கு. கொக்குவில். Advt. 76

புற்று நோய்
(Cancer)

பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்ட ஆயுள் வேத அரிய மருந்து "யோகீஸ்வர ரசம்" புற்று நோயை வேரறுக்கும்.

பூரணகுமடைந்த ஒருவரது சான்றிதழ்.

5 வருஷத்துக்கு முன் எனக்கு வாய்க்குள் வலது பக்க கொடுப்பில் புற்று நோய் கண்டு அனேக வைத்தியங்கள் செய்தும் குணம் இல்லை. 10 மாதத்தின் பின் ஸ்ரீ செல்லையா வைத்தியர் இடம் காட்டி யோகீஸ்வர ரசம் என்ற செந்தூரம் பாவித்துப் பூரண குணம் அடைந்தேன். இன்று வரையில் நல்ல சுகமுடன் இருக்கிறேன். —ச. பாறுவதி

விபரங்கட்கு
பொ. செல்லையா
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 75 கந்தர்மடம்.

மன்னரில் 'குடுகுடு' கிழவர்களும் மறியலில் குதித்தனர்

ஆயிரக்கணக்கான மாணவர் அமைதியாக ஊர்வலம்

மன்னர், மார்ச் 29

திரு. ம. சே. தங்கராசா, எஸ். ஏ. ரி. ஐயாத்துரை, அரசரத்தினம் முதலியோரது தலைமையில் ஆயிரம் ஆண் தொண்டர்களும் திருமதி சந்தான் தலைமையில் ஆயிரம் பெண் தொண்டர்களும் இன்று காலை நாலுமணிக்கு ஊர்வலமாக வந்து மன்னர் கச்சேரியை முற்றுகையிட்டனர்.

முருங்கன் பகுதியில் இருந்து நடக்கமுடியாத குடுகுடு கிழவர்களும் சத்தியாக்கிரகத்தில் குதித்து விட்டார்கள். பச்சிளம் பாலர்களும் பெண் மணிகளும் இன்றைய சத்தியாக்கிரகத்தின் முன்னணியில் நின்றனர். முருங்கனிலிருந்து வந்த சத்தியாக்கிரகிகள் தங்களுடன் இளநீர்க் குலைகளும் நெல், அரிசி, தேசிக்காய் முதலியவற்றையும் டிராக்டர்கள் மூலம் சத்தியாக்கிரகத் தொண்டருக்காகக் கொண்டுவந்து மன்னர் எம். பி திரு. வி. அழகக்கோனிடம் சமர்ப்பித்தனர்.

முஸ்லிம் மக்களும் எழுபத்தைந்து பேராகக் கூடி 24 மணித்தியாலச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டனர்.

நாணட்டான்

நாணட்டான் மேற்குக் கிராமச்சங்கத் தலைவர் திரு. எம். எஸ். பொன்னுக்கோன் தலைமையில் தாங்கி வந்த ஊர்வலம் அரைமைல் நீளமுடையது. ஏராளமான மாணவிகளும் மாணவர்களும் அமைதியாக ஊர்வலம் நடத்தினர். இடிமுழக்கத்துடன் பெய்த மழையையும் பொருட்படுத்தாது தியாகமே உருவெடுத்த நிலையில் சத்தியாக்கிரகிகள் காட்சியளித்தனர்.

முசலிப்பிரிவு மக்கள்

டிராக்டர் லொறி, மோட்டார், சைக்கிள் மூலமாக பொருள்களுடன் வந்த எண்ணூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்களைக்கொண்ட ஊர்வலத்தில் நாணட்டின் மேற்கு, கிழக்கு மக்கள் கலந்திருந்தனர். நாற்பதற்கு மேற்பட்ட கிராமத்து மக்களும் இதிற் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு வாசியான திரு. தம்பாப்பிள்ளை இராசையா 10 நாட்களாக சத்தியாக்கிரகம் செய்கிறார்.

மணியோசையும் மௌனமும்

காலை ஆறுமணி, மத்தியானம் பன்னிரண்டுமணி, சாயங்காலம் ஆறுமணி, இந்நேரங்களில் கணீர் கணீரென்று மணியோலி கேட்டதும் தொண்டர்கள் தம் இருப்பிடங்களில் நின்று எழுந்து இரண்டு நிமிஷ மௌனத்தை அனுட்டிக்கிறார்கள்.

உண்ணாவிரதம்

உயிலங்குளத்தைச் சேர்ந்த திரு. வலஸ்தியார் என்பவர் நேற்று 24 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்தார்.

மாதர் சங்கம்

பெரிய பன்றி விரிச்சான் மாதர் சங்கத்தின் கோஷ்டியொன்று சங்கத் தலைவி எலிசபேத், காரியதரிசி திருமதி திமிக்குக்குருஸ் ஆகியவர்களின் மேற்பார்வையில் ஊர்வலமாக வந்தனர்.

பெரிய விரிச்சானில் அண்மையில் உருவாகிய தொண்டர் படைச் சங்கத்தின் கோஷ்டியொன்று தலைவர் வீ சிதம்பரப்பிள்ளை, காரியதரிசி, யே. சூசைப்பிள்ளை முதலியோரது மேற்பார்வையில் இங்கு வந்து சத்தியாக்கிரகம் செய்தது. கூறினர்.

பொதுமக்களுக்கு

நான் எனது பெயருடன் (ரி.கே. இராசரெத்தினம்) எந்த விதமான துண்டுப்பிரசுரத்தையும், கடந்த மாகாசபைத் தேர்தலுக்குப் பின்னர் வெளியிடவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த அறிவித்தல் சிலரிடையே ஏற்பட்டுள்ள தவறான அபிப்பிராயத்தை நீக்குமென நம்புகின்றேன். இத்துடன் அரிசிப் பங்கீடு சம்பந்தமாகவும் எனக்கு எவ்விததொடர்புமில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
ரி. கே. இராசரெத்தினம்

92, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Advt. 77

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள் காலை 7, பகல் 12. 45, மாலை 6, இரவு 9,

வெள்ளி 31-3-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6 55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7–15 காலைக்கதிர், 7-30 திரை இசை 7-45 கே சித்திரவேல் பக்திப் பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள், பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள்,* 5-15 எஸ், பட்டுச்சாமி -நாகஸ்வரம்*, 5-15 கிராம்சஞ்சிகை' 6-45 வயலின், 7-45 ஆகாசவாணி அஞ்சல், 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 நேயர் விருப்பம்.

* செங்கடக உப நிலையத்தில் அஞ்சல்.

தோட்டத்தில் அஞ்சலி

பதுளை மார்ச் 29

இந்நாட்டிலே மொழி உரிமைக்காக தமிழர்கள் நடத்தும் அறப்போராட்டம், மூலை முடுக்குகளிலே வாழ்கின்ற தமிழ்ப் பேசும் மக்கள் யாவரையும் தட்டி எழுப்பிவிட்டிருக்கிறது. எனறு இலங்கை தொழிலாளர்காங்கிரஸ்பதுளை மாவட்டப் பொதுக் காரியதரிசி திரு. வீர. தங்கவேல் ஏலரிசி குரூப் பணியக்கணக்கு தோட்டத்தில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அறப்போரில் அமைதியாகக் குதித்த யாழ்ப்பாண சத்தியாக்கிரகிகளை ஆட்சியாளர்களின் காவற்படையினர் தடிகொண்டு தாக்கியும், ஊசி கொண்டு குத்தியும் வதை செய்ததைக் கண்டித்தார். மூதூர் எம். பி. ஏகாம்பரத்தின் மறைவுக்கு கூட்டத்தில் அஞ்சலி செலுத்து முகமாக இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இ. தொ. காங்கிரஸ் மகாநாடு

நாவலப்பிட்டி, மார்ச். 30

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வருடாந்த மகாநாடு ஏப்ரல் 21, 22, 23-ம் திகதிகளில் நுவரேலியாவில் நடைபெறும். இ. தொ. காங்கிரஸ் தலைவர் பதவிக்கு திரு. எஸ். தொண்டமான் எம். பி. யும், திரு. எஸ். சோமசுந்தரமும் போட்டியிடுகின்றனர். இத்தேர்தல் ஏப்பிரல் 16 இல் நடைபெறுமெனத் தெரிகிறது.

பீகிங், மார்ச். 30

லாவோஸ் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச மகாநாடொன்றைக் கூட்ட வேண்டுமென்று சீனப் பிரதமர் சௌ என் லாய் கூறியிருக்கிறார். லாவோசுக்கு மாத்திரமன்றி தென்கிழக்காசியா முழுவதும் சமாதானம் நிலவ அந்த மகாநாடு உதவும் என்று அவர் கூறினர்.

சுகவீனத்திற்குப் பிறகு துரித ஆரோக்கியத்தை அளிக்கவல்லது

துரித சுகம் மருந்தினால் மட்டுமன்றி விரைவாகவே உடல் தேர்தலிலும் தங்கியிருக்கிறது. இழந்த பலத்தை துரிதமாகப்பெற உடலுக்குப் பிரத்தியேக போஷாக்குச் சக்தி அவசியமாகின்றது. சரீர வலிவுக்கும் வனப்பிற்கும் தேவையான ஊட்டச்சத்துக்களும் நெஸ்டோமோல்ட்டில் அபரிமிதமாக உள்ளபடியால் துரித நிவாரணத்திற்குத் தேவையான பிரத்தியேகப் போஷாக்குச் சக்தியை அளிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

நெஸ்டோமோல்ட்

மோல்ட்டட் மில்க்

'பிரச்சினையைத்தீர்க்க கேணல் உடுகமவிடம்யோசனை கூறினேம்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் முயற்சிசெய்தோம். அரிசி விநியோக நிலையத்தில் கச்சேரியின் ஒரு கிளார்க்கர் இருக்கிறதென்பதையும் அங்கு உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி ஒருபகுதி நேரம் வேலைபார்ப்பது வழக்கமென்பதையும் தெரிவித்தோம்.

அரிசிவிநியோக நிலையத்திலிருந்து பங்கீட்டாரிக்கான அனுமதிச் சீட்டுக்கள் வழங்கும் ஏற்பாடு சாத்தியமில்லையென்று கேணல் உடுகமை கூறினார். இதற்குமாற்றுயோசனையொன்றையும் அவர் தெரிவித்தார். அனுமதிச் சீட்டுக்கள் அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில்—கச்சேரியில் அல்ல—வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்படலாமென்றும் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கும் கந்தோரை வாசஸ்தலத்தின் வராந்தாவில் வைத்துக்கொள்ள ஒழுங்கு செய்யப்படலாமென்றும் கேணல் உடுகமை தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சித் தலைவர்களைச் சந்தித்து இந்த யோசனையைத் தெரிவித்து, பின்னர் பதில் தெரிவிப்பதாகக் கேணலிடம் கூறினேம்.

நான் தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்தேனா? என்று கேணல்கேட்டு மாலையில் ஒரு செய்தியை எனக்கு அனுப்பினார்.

'இதுவரை எதுவும் செய்யப்படவில்லை' என்று நான் கூறியதுடன், யாழ்ப்பாணம் துறைமுகத்திலுள்ள அரசாங்கக் கட்டிடத்தில் தனியாக ஒரு காரியாலயத்தை இதற்கென இயக்குவது பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஒரு வழியென்றும் யோசனை கூறினேன்.

கூட்டுறவு சமாஜ காரியதரிசி அறிக்கை

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சமாஜ மகாநாட்டுக் காரியதரிசி திரு. [redacted]. க. ராஜசேகரம், பங்கீட்டு அரிசி விநியோக சம்பந்தமாக வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அரிசி விநியோகம் செய்ய வேண்டிய முக்கிய கடமை அரசாங்கத்தையே சேர்ந்தது. எந்த அரசியல் கட்சிமீதோ அல்லது வேறு எவர் மீதோ பழியைப்போட்டு, அவர்கள் தப்பிவிடமுடியாது. கச்சேரியில் அல்லது அரசாங்க அதிகாரியின் இல்லத்தில் அரிசி உத்தரவுச் சீட்டைக் கொடுப்பதை முக்கியமாகக் கருதுகிறார்களேயொழிய மக்களுக்கு அரிசி வழங்கவேண்டிய கடமையை முக்கியமெனக் கொள்ளவில்லை.

இரண்டு இடங்களும் ஒரே கட்டடத்தில் இருப்பதாலும், செல்லும் வழிகள் மறியல் செய்யப்படுவதாலும், அங்குசென்று அனுமதிச் சீட்டுப் பெறுவது முடியாத காரியமாகவுள்ளது. மற்ற இடங்களில் இவ்வித நெருக்கடியான காலங்களில், முன்னர் அனுதாபமுள்ள அரசாங்கம் அரிசி விநியோகம் தடைபடாமல், தக்க ஏற்பாடு செய்திருந்தது. இவ்வரசாங்கம் இதுபற்றி வாளாவிருப்பது, ஜனங்களின் கஷ்டங்களை உணராமலோ, அல்லது பழிவாங்கும் நடவடிக்கையாகவோ இருப்பதுபோல் தோன்றுகிறது. மக்களின் இன்னல்களை தீர்ப்பதாக கூறும் அரசாங்கம் இவ்வித மனப்பான்மை காட்டுவது அவர்கள் கூற்றுக்கு முரண்பட்டதாகும்.

காங்கேசன்துறையில் இராணுவம் வாபஸ்

மாவிட்டபுரம், வெள்ளி காங்கேசன்துறை உணவுக் கட்டுப்பாட்டு விநியோக நிலையத்தின்முன் காவலுக்குப் போடப்பட்டிருந்த இராணுவம் நேற்று அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இவர்கள் தற்பொழுது காங்கேசன்துறை வாடிவீட்டில் தங்கியுள்ளார்கள்.

வாபஸ் பெறப்பட்டுள்ள போதிலும் இரண்டு மணித்தியாலத்துக்கொருமுறை ஸ்தலத்துக்குச் சென்று வருகிறார்கள்.

'ஹென்ற்லி'

உடை அலங்காரத்தின்

உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட் ★ ஷோட்

★ காற்சட்டை ★

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்

நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,

அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,

பழைய விமான நிலைய வீதி,

(Old Air Port Road)

இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:

ஆதம்பாய் ஸ்ரோஸ்

16, பெரியகடை,

யாழ்ப்பாணம்

உபதேர்தல்

குருநாகல் தொகுதி விபரம்

நேற்று முன்தினம் நடைபெற்ற உபதேர்தலில் குருநாகல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர் வெற்றி பெற்றார். விபரம் வருமாறு:-

ஜே. பத்திராஜ (சுதந்திரக் கட்சி) —	10,807
டி. பி. வெகெதர (யு. என். பி.) —	9,834
ஹரிஸ்சந்திர விஜயதுங்க (ஜாதிக விமுக்தி பெரமுனை) —	386
டி. எம். டபிள்யு. டபிள்யு. நாரம்பனவ (சுயேச்சை) —	173
திருமதி அசோகமாலா தெல்கொட (சுயேச்சை) —	147
அதிகப்படியான வாக்குகள் —	973
பழுதானவை —	84

(உபதேர்தல் முடிவுகள் "ஈழநாடு" நேற்றைய பதிப்பில் வெளியிடப்பட்டிருந்தது. குருநாகல் தொகுதி விபரம் மட்டும் நேற்றைய பதிப்பில் வெளிவரவில்லை.)

இன்று பெரிய வெள்ளிக்கிழமை

இன்று பெரிய வெள்ளிக்கிழமையை முன்னிட்டு இலங்கை வானொலி விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்குசெய்திருக்கிறது. இன்று அரசாங்க வங்கி விடுமுறை தினமாகும்.

உபதபால் நிலையத்தை மாற்றக்கூடாது

கட்டைவேலிக் கிராமச் சங்கத் தீர்மானம்

உடுப்பிட்டி வியாழன்

திரு. ஆர். சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்ற கட்டைவேலிக் கிராமச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:-

அல்வாய் உபதபால் நிலையத்தை வேறிடத்துக்கு மாற்றக்கூடாதென அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுப்பது.

யாழ்ப்பாண மாவட்ட கிராமச்சங்க மாநாட்டில் தமிழ் மொழி உபயோக மசோதா விஷயமாக தீர்மானிக்கப்பட்ட பிரேரணையை ஏற்றுக்கொள்வது.

சத்தியாக்கிரகம் காரணமாக கச்சேரி மூடப்பட்டிருப்பதால் சங்கத்தில் சேர்க்கப்படும் பணத்திலிருந்து சங்க ஊழியருக்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

மாணவர் மறியல்

யாழ்ப்பாணம், வெள்ளி

தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அனுமதிகொடுத்ததன்பின் முதல் தடவையாக நேற்றுமாலை தொடக்கம் இன்று மாலை வரை 18 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட மாணவமன்றத்தினர் யாழ்ப்பாணம் கச்சேரிவாசல்களில்மறியல்செய்கிறார்கள். நேற்றுமாலைமுற்றவெளி மைதானத்திலிருந்து மாணவர்கள் ஊர்வலமாகக் கச்சேரியை வந்தடைந்தனர்.

'பழைய பூங்கா' வாசகசாலையுத்து முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நேற்று 'பழைய பூங்கா'வின் மத்திக்கு இடம் பெயர்ந்தனர். கல்விச்சட்ட பற்றிய புகார்களைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. என்றாலும் அமைதி நிலவும் நேரத்தில் இராணுவச் சிப்பாய்களின் பைலா நடனமும் பாட்டும் இன்னும் நிற்கவில்லை.

வீடமைப்புக்கு ரூ. 1200 கோடி

புதுடில்லி, மார்ச் 30

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வீடமைப்புக்காக 1200 கோடி ரூபாய் செலவிடப்படுமென ஆறிவிக்கப்பட்டது. 2-ம் திட்டத்தில் அரசாங்க, தனியார் முயற்சிகளின் மூலம் வீடமைப்புக்கு 1000 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

ஆஸ்பத்திரிமுன் மறியல்?

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ்ப்பாணம் சுகாதார அதிகாரி காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலைக்கும், கச ஆஸ்பத்திரிக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் ஆஸ்பத்திரித்தொழிலாளருக்கு வேண்டிய அரிசியின் விவரம் தெரிவிக்கப்பட்டால் தேவையான அரிசி விநியோகிக்கத்தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அங்ஙனம் அரிசி விநியோகிக்கப்படும் பட்சத்தில் தொண்டர்கள் இரு ஆஸ்பத்திரிகளின் முன்பும் சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றனர். வியாழன் மாலை 6மணிவரை ஊழியர்கள் எவரும் விவரம் தெரிவிக்கவில்லை.

அடுத்த நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் பேசுகையில், "இழந்த உரிமையை மீண்டும் பெறும்வரை எமது சாத்வீகப் போராட்டத்தை நாம் கைவிடமாட்டோம்" என்றார்.

தமிழ் பேசும் மக்களின் மன உறுதியை படைபலத்தைக் கொண்டு குலைத்துவிடமுடியாதென்றும் அரிசி கொடுக்காமல்விட்டால் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்களென்று அரசாங்கம் வீண் கனவு காண்கிறதென்றும் திரு. சிவசிதம்பரம் கூறினார்.

சிறுபான்மைத் தமிழ் மக்கள் அரசாங்கம் வகுக்கும் சதித்திட்டத்திற் காளாகாமல் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றி பெறுவதற்குத் தொடர்ந்து ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாக அவர் மேலும்கூறினார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் மொழி உரிமைப் போராட்டத்தை ஒழித்துக்கட்ட அரசாங்கம் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்ததால் இப்பொழுது அரிசியில் கைவைத்து வயிற்றிலடிக்கப் பார்த்தும் மக்கள் தங்கள் உரிமைப்போராட்டத்தை விட்டுக்கொடுக்காமலிருக்கிறார்களென்பது பாராட்டுக்குரியதென்றார்.

காதி எம். எம். சுல்தானின் வேண்டுகோளுக்கிணங்க ஜனப் நூர்முகம்மது பேசினார்.

ஹாஜி வி. எம். எம். அபூசாலி பேசுகையில் 'மதத்தால் இஸ்லாமியர்களானாலும் மொழியால் நாங்கள் தமிழர்கள். முஸ்லிம் மக்களும் இங்கு வாழத்தான் போகிறார்கள்" என்று கூறினார். தமிழர்களுடன் முஸ்லிம் மக்கள் இந்த உரிமைப் போராட்டத்தில் தோளோடு தோள் நிற்பார்களென்று ஹாஜி அபூசாலி கூறினார்.

புதுமைலோலன், திரு. க. துரைரத்தினம் மற்றும் பலரும் பேசினர்.

திருமதி [redacted] மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தேசியகீதம் பாடினார்.

போக்குவரத்துச் சபைத் தொழிலாளர் பணமுடிப்பொன்றை இக்கூட்டத்தில் அளித்தனர்.

இராணுவ வாகனம் பற்றி புகார்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை பொழுது போக்கு விடுதியின் முன்பாகவும், காங்கேசன்துறை விற்பனை இலாகா முன்பாகவும் தொடர்ந்து சத்தியாக்கிரகம் அமைதியாக நடைபெற்று வருகிறது. சென்ற புதன்கிழமை காலை சத்தியாக்கிரகிகளுக்கு வெற்றிலை வாங்கச்சென்ற திரு. டி. மாவானர் என்பவரை ஏ. வை. 4016 இலக்க முடைய ட்றக்வண்டி (இராணுவலொறி) விபத்துக்குள்ளாக்க முனைந்ததென்று காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

விற்பனை இலாகாவான்சார் திரு. எச், வில்சன் என்பவருக்கு அரிசி வழங்கவேண்டுமெனச் சத்தியாக்கிரகிகளைக் கேட்டபோது அவர்கள் இதனைத் தடுத்தனர் பின்னர் தொண்டரொருவர் தமது இல்லத்திலிருந்து ஆறு கொத்து அரிசி உதவினர். இது சம்பந்தமாக டாக்டர் இ. எம். வி. நாகநாதனிடம் விசாரித்தபோது அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கிரிக்கெட் போட்டியில் ரேயலுக்கு வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக்கழகக் கிரிக்கட் கோஷ்டிக்கும், தையிட்டி ஸ்டார் கிரிக்கட் கோஷ்டிக்குமிடையே சிமிந்தித் தொழிற்சாலை மைதானத்தில் நடந்த கிரிக்கட் போட்டியில் ரேயல் விளையாட்டுக்கழகம் 63 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நல்லூர் கோவிலில் பங்குனி உத்தரம்

இன்று பங்குனி உத்தரம். நல்லூர் கந்தசாமி கோவிலில் இன்று காலை 8 மணிக்கு காவடி மத்தியானம் மகேச்வரபூசை இரவு அர்த்தஜாமத்துக்குப். பின் முத்தமிழ்மணி ஸ்ரீ மணி பாகவதர் கதாகாலட்சேபம்.

விவசாயத்தில் வடமாகாணத்தின் முன்னேற்றம்

பலாங்கொடை எம். பி. பாராட்டு

பலாங்கொடை, மார்ச் 29

"கஷ்டங்கள் எவ்வளவு இருந்தபோதிலும் அவைகளைப் பாராட்டாமல் வடமாகாண விவசாயிகள் தானிய விளைச்சலில் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்" என்று பலாங்கொடை எம். பி. திரு. சி. எஸ். ரத்வத்தை பாராட்டியுள்ளார்.

பலாங்கொடை குமாரவித்தியாலயத்தில் நடைபெற்ற விவசாயிகள் மகாநாட்டில் திரு. ரத்வத்தை பேசினர். வடமாகாணத்துக்குச் சென்று விவசாயிகளின் சாகுபடி முறைகளை நேரில் பார்த்தறிவது நல்லது என்று அவர் பலாங்கொடை விவசாயிகளுக்கு யோசனை கூறினர். கூட்டத்துக்கு செல்வி சுறிமா அட்டப்பத்து என்ற பெண் விவசாயி தலைமை வகித்தார்.

நேரு—ரஸ்க் சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 30

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டீன் ரஸ்க், இன்று புதுடில்லியில் ஸ்ரீ நேருவைச் சந்தித்து 1 1/2 மணி நேரம் சம்பாஷணை நடத்தினர். லாவோஸ், காங்கோ ஆகிய விஷயங்கள் பற்றி தாங்கள் விவாதித்ததாயும், பேச்சுவார்த்தை உபயோகரமாய் இருந்ததாயும் திரு. ரஸ்க் நிருபர்களிடம் தெரிவித்தார். பேச்சுவார்த்தைக்குப்பின் அவர் அமெரிக்கா பிரயாணமானார்.

பட்டினிபோட்டு

வதைக்கவேண்டாம்

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 30

யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் குடும்பங்களுக்கு அரிசிப் பங்கீடு கிடைக்காதது குறித்து தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் கொழும்புக் கிளை கவலை தெரிவித்திருக்கிறது.

சத்தியாக்கிரகம் ஆரம்பமான முதல் இரு வாரங்களிலும் அரிசி வழங்கப்பட்ட ஒழுங்குகளை அரசாங்கம் நிறுத்தியதனால்தான் இந்த நிலைமை உருவாகியது என்று மேற்படி சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அத்தியாவசிய உணவு விநியோகம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்சினையைச் சத்தியாக்கிரகத்துக்கு எதிரான ஒரு ஆயுதமாகப் பாவிக்கவேண்டாமென்று சங்கம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

தங்கள் குடும்பத்தினர் பட்டினி கிடக்கையில் தம்மால் தொடர்ந்து வேலை செய்வது முடியாத காரியம் என்று பல அங்கத்தவர்கள் புகார் செய்திருப்பதாகவும் எனவே அரிசிப் பங்கீட்டுக்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்படியும் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. இது தவிர்ன் பட்டினிகிடக்கும் தங்கள் குடும்பங்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்துகொடுப்பதற்காக அடிக்கடி செல்லவேண்டியிருக்குமாகையால் ஏராளமான அரசாங்க தமிழ் ஊழியர்கள் அடிக்கடி வேலைக்கு வராமல் நிற்கக்கூடுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை சங்கீத நாட்டிய சங்கம்

புதுவருட நிர்வாகிகள் தெரிவு

கொழும்பு, புதன்

இலங்கை சங்கீத நாட்டிய சங்கத்தின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் சைவ மங்கையர் கழக மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்-திரு. எஸ். கணேசராசா, உபதலைவர்கள்-திருமதி எஸ். கனகசபை, திரு. எஸ். அருணத்திராம், பொதுக்காரியதரிசி-திரு. எஸ்.மகாலிங்கம், உதவிக்காரியதரிசிதிரு.ரி.சிவானந்தன், தனாதிகாரி- திரு. ஏ. திருச்செல்வம், நிரந்தரக் குழுக்களின் காரியதரிசிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்:-

நடனம் - திருமதி திலகவதி கனகசபை, நாடகம்-திரு. வி. சுந்தரலிங்கம், சங்கீதம்-செல்வி ருத்ராணி நல்லிநாதன். கமிட்டியின் இதர அங்கத்தவர்கள்- திரு. ஆர். ஸ்ரீகாந்தன், திருமதி கே. விமலசிங்கம், திரு. ஆர். பொன்னுராஜா.

ஆசிரியர் இடமாற்ற திட்டம்

கொழும்பு, வியாழன்

மேமாதம் 1ம் தேதி முதல் ஆசிரியர்கள் இடமாற்றத் திட்டம் அமுலுக்குவருமென்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எதிர்காலத்தில் இடமாற்ற விண்ணப்பம், புதிய திட்டத்தின்படி அனுப்பப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கார் மோதியதால் தொழிலாளிக்கு காயம்

பண்டத்தரிப்பு, மார்ச் 29

இன்று காலை ஒன்பதரை மணியளவில் பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய்வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் வண்டி யொன்றை மீன்பிடித் தொழிலாளி வெலிச்சோர் யக்கோமுத்து ஓட்டிச் சென்ற பைசிக்கிள்மீது மோதியதினால், அத்தொழிலாளி பலத்தகாயம் அடைந்துள்ளார். அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறார்.

நிதிமந்திரி ஜெர்மன் செல்வார்

மாஸ்கோ, மார்ச் 30

நிதிமந்திரி திரு பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அடுத்த வாரம் ஜெர்மனிக்கு விஜயம் செய்வார்.

முதல் எதிரிக்கு 5 வருடச்சிறை

இரண்டாம் எதிரி விடுதலை

வல்வெட்டித்துறைக் கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டித்துறைக் கொலை வழக்கில் முதல் எதிரிக்கு ஐந்து வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து நீதியரசர் என். சின்னத்தம்பி நேற்றுத் தீர்ப்பளித்தார். இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

வல்வெட்டித்துறையில் 1959-ம் ஆண்டு மே மாதம் 11ந் திகதி வைத்திலிங்கம் நவரத்தினம் என்பவரைக் கொலைசெய்ததாகவும் வைத்திலிங்கம் கதிர்காமத்தம்பி எனபவரைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் குற்றம் சாட்டி பூபாலன் என்றழைக்கப்படும் மயில்வாகனம்கோபால கிருஷ்ணன், பொன்னுத்துரைசோதி நாராயணசாமி ஆகியோர்மீது தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிர் திரு எஸ். சிவராசா வழக்கு விசாரணையை நடத்தினர். திரு. என். நடராசா, திரு. கே. சண்முகசுந்தரம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஈ. பி. சத்துரு குலசிங்கி முதல் எதிரியின் சார்பிலும், திரு. என். நடராஜா, திரு. கே சண்முகசுந்தரம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் இரண்டாவது எதிரியின் சார்பிலும் ஆஜராகினர். இரண்டு எதிரிகளின் சார்பிலும் திரு. கே. கந்த ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

வி. கதிர்காமத்தம்பி, இ துரையின் மனைவி சிவபாக வதி, பிரேதபரிசோதனை நிய டாக்டர் ஆகியோர் சிய மனித்தபின் கொலை யும் நோக்கமில்லை கைமோசக்கொலைக் குற்றத முதல் எதிரி ஒப்புக்கொ டார்.

நீதியரசர் திரு. என். னத்தம்பி முதல் எதிரி ஐந்து வருடக் கடுங்கா சிறைத்தண்டனை விதித் தீர்ப்பளித்தார். இரண்டா எதிரியை அவர் விடுதலை தார்.

ஜெர்மன் என்ஜினியர்க இரத்ததானம்

கொழும்பு, மார்

இ. போ. ச. அபிவிரு திட்டங்களில் ஈடுபட்டுள் ஜெர்மன் என்ஜினியர் கள் இரத்தவங்கிக்கு கலன் இரத்தம் தானம் திருக்கிறார்கள்.

தண்ணீருற்று, மா

தண்ணீருற்று அரசினர் சாலை ஆசிரியர்களுக்கு மாதகாலமாக சம்பளம் கப்படவில்லை. சென்ற ஜ ல் இப்பகுதிப் பாடசா மாற்றப்பட்ட இவ்வாகிரி இதுவரை சம்பளம் யாதபடியால் கஷ்டப்ப றனர்.

ரசிகர்களை மகிழ்விக்க
திரும்பவும் காட்சியளிக்கிறது
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனால் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.

ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.

.....எனவே

பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.....
ஆனால் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்.....

ஏன்?

எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?
பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்.....

புதுமை விரும்பிகள்

எம். ஜி. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி,
பி. எஸ். கோவிந்தன்

ஈ. வி. சரோஜா
மாதுரிதேவி, வி. சுசீலா

நடித்த

அசோகா பிக்சர்ஸ்

என் தங்கை

டைரக்ஷன்: CH. நாராயணமூர்த்தி & M.K.R. நம்பியார்
கதை,வசனம்: வில்லன்: T.S. நடராஜன் ஸ்டியோ: நியூடோன்
அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவன்யூ, பதூர் 4

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

நீலமலைத்திருடன்

ரஞ்சன் அஞ்சலிதேவி நடித்தது.

மாலை 6-30 இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30 மெற்னி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.